முருகப்பெருமான் துணை

**மகான் நகுலன் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

16.04.2023, ஞாயிற்றுக்கிழமை

1. ஞான வள்ளலே அரங்கா
ஞான பண்டிதன் அம்சமாக
தானதரும ஞான வழிநடத்தி
தரணி காத்திடும் ஞானதேசிகனே
2. தேசிகனே உன்பெருமை கூறி
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
ஆசிபட சோபகிருது தகர்திங்கள்
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 3ம் நாள், 16.04.2023, ஞாயிற்றுக்கிழமை)
அறிவிக்க சூல திகதி கதிர்வாரம்
3. வாரமதில் நகுலன் யானும்
வழங்குவேன் உலகநலம்பெற
சோரமிலா ஞான ஆண்டாக
சோபகிருது துவங்கி இருக்க
4. இருக்கவே கலியின் மாற்றம்
இந்த ஆண்டில் முடிவுக்குவரும்
கருத்தாக சகல வகையிலும்
காப்பாக வளர்ச்சியாக மாறும்
5. மாறுதலை தரவல்ல சக்தியாக
மாதருமமாக களத்தில் இறங்கி
ஆறுதலை அரங்கன் அருளி
அற்புதம் நடத்தி வருக
6. வருகவே அன்னதானம் எனும்
வள்ளல் நெறி எங்கும் பரவ
தரும சக்தியால் உலகோர் இணைந்து
தனிப்பெருங் கருணை வடிவாகமாறி
7. மாறியே உலகோரின் பசிபிணி
மறுகணமே விரட்டப்படும்
ஆறுமுகனை வழிபடும் வண்ணம்
ஆற்றலான தீட்சை பலம்தந்திட

**8.** தந்திடும் அரங்க ஞானியரின்
தவ தரும பலமிக்க கரம்பட
எந்தவித சலனமும் இன்றி
ஏற்றுவிட மகாமந்திர தீட்சை

**9.** தீட்சைபலம் பெருந்துணையாக
தொடர்ந்து வந்து வழிநடத்தி
மாட்சிமை மிக்க ஞானமுள
மாற்றம் தந்து காப்புதனை தரும்

**10.** தருகவே ஞான உலகமாக
தரணி சத்திய நிலை தேறி
தருமபலமுடன் தயவும் கூடிட
தரணி எங்கிலும் ஞானஆட்சி

**11.** ஆட்சி ஆறுமுகனார் தலைமை
அகிலம் வணங்கி ஏற்றிட
ஆட்சி வேலவன் ஆட்சியாக மாறும்
அறிவித்த அனுகூல ஆசி முற்றே

—சுபம்—